# தமிழ் நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண். 100, அண்ணா சாலை, கிண்டி, சென்னை- 600 032.
தொலைபேசி : 044- 22201337
மின்னஞ்சல் முகவரி : ombudsmanlocal@tn.gov.in

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை- 600 032.
முன்னிலை : முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப., (ஓ)

*******

அசல் மனு எண். 929/2016

ஆணை எண். 166/2016

நாள் : 17/10/2016

03.09.2016 நாளிட்ட டைம்ஸ் ஆப் இண்டியா நாளிதழ் – முறை மன்ற நடுவத்தால் தாமாக முறையாக பதிவு செய்யப்பட்டது.

மண்டல அலுவலர்,
மண்டலம் –9,
சென்னை மாநகராட்சி. – எதிர் மனுதாரர்

03.09.2016 நாளிட்ட"டைம்ஸ் ஆப் இண்டியா" ஆங்கில நாளிதழில், சென்னை, நந்தனம், டர்ன்புல்ஸ் சாலையில் அமைந்துள்ள பூங்காவின் பராமரிப்பு மற்றும் தற்போதைய நிலையினை குறித்து "Broken lights and overgrown shrubs main 'draw' at this park" என்ற தலைப்பில் செய்தி வெளியிடப்பட்டிருந்தது. 2014–ஆம் ஆண்டு தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர் சட்டத்தில், பிரிவு 2(8)(ii)–ல் அளித்துள்ள பொருள் வரையறைக்கேற்ப இச்செய்தி குறித்த நிகழ்வினை "சீர்கேடான நிர்வாகம்" எனக் கருதி மேற்படி சட்டம், பிரிவு 7ன் கீழ் முறையீடாக விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டு, மேற்படி செய்தி குறித்த சென்னை மாநகராட்சி 9–வது மண்டல அலுவலரின் அறிக்கை பரிசீலிக்கப்பட்டு கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது.

## ஆணை

03.09.2016 நாளிட்ட டைம்ஸ் ஆப் இண்டியா நாளிதழில், சென்னை மாநகராட்சி, 9–வது மண்டலம், நந்தனம் டர்ன்புல்ஸ் சாலையில் உள்ள பூங்கா பராமரிப்பின்றி உள்ளது குறித்து செய்தி வெளியிடப்பட்டிருந்தது. பூங்கா பராமரிப்பில், உள்ள முக்கிய குறைபாடுகள் குறித்து கீழ்க்காணும் தகவல்கள் தெரிவிக்கப்பட்டிருந்தன.

(1) மது அருந்துபவர்களுக்கும், சமூக விரோத செயல்களில் ஈடுபடுபவர்களுக்கும் பூங்கா புகலிடமாக உள்ளது.

(2) நீண்டநாட்களாக தண்ணீர் ஊற்றப்படாமலும் அழகு படுத்தப்படாமலும் செடிகள் வறண்டு உள்ளன.

(3) மின்விளக்குகள் மற்றும் குடிநீர் குழாய் உடைக்கப்பட்டும், திருடப்பட்டும் உள்ளன.

(4) பழுதடைந்த நடைபாதை மற்றும் விசைக்குழாய் அறை (Pump room).

(5) சிதறிக்கிடக்கும் உடைந்த பீங்கான் மற்றும் சீசாக்கள்.

2. மேற்படி செய்தி குறித்து சென்னை மாநகராட்சி, 9–வது மண்டல அலுவலரின் அறிக்கை இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.926/2016, நாள் 09.09.2016 மூலம் கோரப்பட்டு, மண்டல அலுவலரின் அறிக்கை 27.09.2016 அன்று இம்முறைமன்ற நடுவத்தால் பெறப்பட்டது. மண்டல அலுவலர் தனது அறிக்கையில் தற்பொழுது பூங்கா முறையாக பராமரிக்கப்பட்டு வருவதாகவும், பராமரிப்பு பணியினை மேற்கொள்வதற்கு ஓராண்டு கால ஒப்பந்தம் குறித்த ஆணை 28.05.2016 அன்று வழங்கப்பட்டுள்ளதாகவும், ஒப்பந்தப்பணி 27.05.2017 வரை தொடரும் என்றும் உடைந்த மின்விளக்குகள் மற்றும் தண்ணீர் குழாய் சீர் செய்யப்பட்டு விட்டன என்றும் தெரிவித்துள்ளார். மேலும் சமூகவிரோத செயல்களை தடுக்கும் பொருட்டு காவல் துறையின் ஒத்துழைப்பும் கோரப்பட்டுள்ளதாகவும், முன்னுரிமை அடிப்படையில் மேற்படி பூங்கா பராமரிப்பு பணி மேற்கொள்ளப்பட்டு வருவதுடன் தொடர் கண்காணிப்பும் மேற்கொள்ளப்படும் என மண்டல அலுவலர் உறுதி அளித்துள்ள நிலையில் இந்நேர்வின் மீதான நடவடிக்கையை இத்துடன் முடித்துவைத்து இம்முறைமன்ற நடுவம் ஆணையிடுகிறது.

--//ஒப்பம்//--

தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர்

பெறுநர்

மண்டல அலுவலர்,
மண்டலம் –9,
சென்னை மாநகராட்சி,
எண்.4, , 4வது குறுக்குத் தெரு,
லேக் வியூ ரோடு
சென்னை.34.